**வாரியபொல பிரதேச சபை**
**குருநாகல் மாவட்டம்**

-----------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 15 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் வாரியபொல பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டின் திசெம்பர் மாதம் மோட்டார் வாகனங்களிலிருந்து கட்டணங்கள் அறவிடப்பட்டமைக்காக ரூபா 13,542 ஆன படிகள் கொடுப்பனவு மீளாய்வாண்டின் செலவினமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டின் திசெம்பர் மாதம் பேருந்துகளிலிருந்து கட்டணங்கள் அறவிடப்பட்டமைக்காக ரூபா 55,800 ஆன படிகள் கொடுப்பனவு மீளாய்வாண்டின் செலவினமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டின் ரூபா 1,520 தொகையான புகையிரத பட்டியல் தீர்ப்பனவு மீளாய்வாண்டின் செலவினமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**1.3.2 பெறவேண்டிய கணக்குகள்**

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 77,361,081 ஆக இருந்ததுடன், அவற்றில் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடாமல் காணப்படும் மீதிகளின் பெறுமதி ரூபா 6,404,520 ஆக இருந்தது.

**1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்**

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 61,968,735 ஆக இருந்தது. அவற்றில் ரூபா 4,161,572 தொகை 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்படும் செலுத்த வேண்டிய மீதிகளாக இருந்தன.

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மை**

வைப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து 02 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா ரூபா 461,101 கூட்டுத்தொகையான 02 வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 570 மற்றும் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 56,289,766 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 34,185,282 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 22,104,484 ஆன முன்னேற்றமொன்று காணப்பட்டது. இந்த செயற்பாட்டு விளைவிற்கு ரூபா 130,823,997 ஆன மூலதன உதவி மற்றும் ரூபா 184,555,739 இற்கான மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 2,558,024 ஆன மிகையாக மாறியுள்ளது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள்ள மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் உரிய முரண்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | வருமானம் | | | | செலவினம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | 2015 | 2014 | முரண் | செலவின விடயம் | 2015 | 2014 | முரண் |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | உழைத்த வருமானம் | 24,901 | 24,687 | 214 | தனிப்பட்ட வேதனம் | 82,596 | 52,380 | (30,216) |
| (ii) | ஏனையவை | 148,991 | 148,774 | 217 | ஏனையவை | 35,006 | 86,896 | 51,890 |
| | உப மொத்தம் | 173,892 | 173,461 | 431 | உப மொத்தம் | 117,602 | 139,276 | 21,674 |
| (iii) | மூலதன வருமானம் | 130,824 | 148,423 | (17,599) | மூலதன செலவினம் | 184,556 | 156,852 | (27,704) |
| | மொத்தம் | 304,716 | 321,884 | (17,168) | மொத்தம் | 302,158 | 296,128 | (6,030) |
| | செயற்பாட்டு விளைவு | 56,290 | 34,185 | 22,105 | மிகை | 25,558 | 25,756 | (198) |

(ஆ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானமான ரூபா 173,892,105 தொகையில் 70 சதவீதமானவை அதாவது ரூபா 122,354,154 தொகையும் சபையினால் உருவாக்கிய வருமானம் அல்லாத நீதிமன்றத் தண்டப்

பணம், முத்திரைக் கட்டணம், சம்பள மீளளிப்பு போன்ற தன்மையுள்ள பெறுவனவுகளினை அடங்கியுள்ளது. அதே போல் மூலதன வருமானமாகிய ரூபா 130,823,997 ஆன மொத்தத் தொகையும் கமநெகும, மகநெகும போன்ற மூலங்களின் பேரில் வேறு நிறுவனங்களின் மூலம் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி விடயங்களுக்காக கிடைக்கப்பெற்ற பணத்தினை அடங்கியுள்ளது.

(இ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவினமான ரூபா 117,602,339 தொகையில் 70 சதவீதமான அதாவது ரூபா 82,595,599 தொகை தனிப்பட்ட சம்பளத்திற்காக செலவிடப்பட்டிருந்தததுடன் அவற்றில் 94 சதவீதமான ரூபா 78,429,691 ஆன சம்பள மீளளிப்பாக உள்ளூராட்சி மன்ற ஆணையாளரினால் வழங்கப்பட்டிருந்ததுடன் அப் பெறுமதி ஏனைய வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே மூலதனச் செலவினமான ரூபா 184,555,739 தொகையில் 29 சதவீதமான தொகையில் அதாவது ரூபா 55,342,162 மாத்திரம் சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தததுடன் எஞ்சிய மீதி 70 சதவீதம் அதாவது ரூபா 129,213,577 தொகை கமநெகும, மகநெகும ஆகிய மூலங்களின் பேரில் வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி விடயங்களை அடங்கியுள்ளது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் நிலுவை வருமானம் என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

| | 2015 | | | 2014 | | |
|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | மதிப்பிடப் பட்டது | உள்ளவாறா ன | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டிய பற்றாக்குை ற | மதிப்பிடப் பட்டது | உள்ளவா றான | திசெம்பர் 31 இல் உள்ளாறு திரட்டிய பற்றாக்குறை |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) வீதவரியும் வரியும் | 3,123 | 2,212 | 1,285 | 4,270 | 4,879 | 1,282 |
| | 9,112 | 8,991 | 361 | 9,195 | 8,564 | 352 |
| (ii) குத்தகை வாடகை | | | | | | |
| (iii) அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 644 | 644 | - | 657 | 799 | 29 |
| (iv) ஏனைய வருமானம் | 41,148 | 2,828 | 45,091 | 93,204 | 145,607 | 59,554 |
| மொத்தம் | 54,027 | 14,675 | *46,737 | 107,326 | 159,849 | 61,217 |

### 2.3.2 பட்டியலிடப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2015/01/01 இல் நிலுவை | ஆண்டில் பட்டியலிட்டது | மொத்தம் | | வருமான சேகரிப்பு | | | நிலுவை மீதி | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2015/01/01 இல் நிலுவை | பட்டியிலிடப்பட்ட வருமானத்தில் சேகரித்த வருமானம் | மொத்தம் | 2015/01/01 இல் நிலுவை | பட்டியிலிடப்பட்ட வருமானத்தில் சேகரித்த வருமானம் | 2015/12/01 இல் நிலுவை |
| | ரூபா. 000 | | | | | | | | |
| வீதவரி மற்றும் வரி | 1,282,428 | 3,123,204 | 4,405,632 | 901,930 | 2,211,960 | 3,113,890 | 380,498 | 911,244 | 1,291,742 |
| வாடகை | 351,865 | 9,111,763 | 9,463,628 | 111,600 | 8,991,263 | 9,102,863 | 240,265 | 120,500 | 360,765 |
| அனுமதிப் பத்திர கட்டணங்கள் | - | 643,890 | 643,890 | - | 643,890 | 643,890 | - | - | - |
| சேவைக்கான கட்டணம | 29,400 | - | 29,400 | 29,400 | - | 29,400 | - | - | - |
| பிடியாணை கட்டணமும் தண்டப் பணமும் | 502,625 | 4,126,675 | 4,629,300 | 502,625 | 2,827,550 | 3,330,175 | - | 1,299,125 | 1,299,125 |
| ஏனைய வருமானம் | 59,051,972 | 37,021,403 | 96,073,375 | 56,352,669 | - | 56,352,669 | 2,699,303 | 37,021,403 | 39,720,706 |
| மொத்தம் | 61,218,290 | 54,026,935 | 115,245,225 | 57,898,224 | 14,674,663 | 72,572,887 | - 3,320,066 | - 39,352,272 | *42,672,338 |

* நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட நிலுவை மீதிகள் சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுடன் பிரகாரமான மீதிகளுடன் இணங்கவில்லை.

### 2.3.3 வீதவரியும் வரிகளும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் 4134 வீதவரி அலகுகளுக்காக ரூபா 3,070,593 பட்டியலிடப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டிய நிலுவை ரூபா 1,182,080 ஆக இருந்தது. ஆரம்ப வீத வரி நிலுவை ரூபா 1,167,802 ஆக இருந்ததுடன் அதில் உப அலுவலக நிலுவை ரூபா 301,625 ஆக இருந்தது. இதில் வருடத்தினுள் ரூபா 185,109 அதாவது 61 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) பிரதேச சபையின் ஆரம்ப நிலுவை ரூபா 107,694 ஆக இருந்ததுடன், இதில் வருடத்தினுள் ரூபா 12,920 அதாவது 12 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வெளிக்களத்தில் நிலுவை வருமான அறவீட்டின் முன்னேற்றம் மிகக் குறைந்த அளவில் காணப்பட்டது.

### 2.3.4 குத்தகை வாடகை

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சொத்துக்களை வாடகைக்கு வழங்கியமையால் நிலுவை வருமானம் ரூபா 251,345 ஆக இருந்தது. அதில் ரூபா 204,350 தொகை 2009 ஆம் ஆண்டிலிருந்து நிலவி வரும் மீதிகளாகும்.

### 2.3.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,299,125 தொகையும் முத்திரைக் கட்டணம் ரூபா 39,720,706 ஆக இருந்தன.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதேச சபையின் அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் மீதி ரூபா 5,883,720 ஆக இருந்ததுடன் அதில் ஓய்வுபெற்ற, இடமாற்றம் பெற்றுச் சென்ற, சேவைக்கு வருகை ததராமை போன்ற காரணங்களில் 2000 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 16 ஆண்டு காலப்பகுதியில் அறவிடப்படாமல் ரூபா 313,992 பெறுமதியான 23 கடன் மீதிகள் காணப்பட்டதுடன் அக்கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபையின் மீதி ரூபா 12,508 தொகையான வங்கி மீதிகள் காணப்பட்டன.

### 3.2 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

மாகாண நிச்சயிக்கப்பட்ட கொடைகளின் கீழ் ரூபா 520,000 தொகையும் மாகாண நிதியத்திலிருந்து ரூபா 274,347 தொகையும் செலவிடப்பட்டு கொங்கிரீட் தூண்கள் இரும்பு சட்டகங்கள் மற்றும் சின்க் அலுமினியம் தகடுகள் பயன்படுத்தப்பட்டு நிலத்திற்கு கொங்கிரீட் இட்டு அரைப்பங்கு வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த வாரியபொல திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்தின் கூட்ட மண்டபம்

அமைக்கப்பட்டு குறித்த நோக்கத்திற்குப் புறம்பாக விற்பனை செய்யக்கூடிய கழிவுப்பொருட்கள் சேகரிப்பதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தன.

### 3.3 சுற்றாடல் சார்ந்த பிரச்சினைகள்

80 காணித் துண்டுகளுடன் கூடிய தலகஹகம காணிப்பகுதி பகுதிகளாக்கப்பட்டு விற்பனை செய்யும் போது காணியின் அபிவிருத்தி திட்டம் 2015 சனவரி 18 ஆந் திகதி சபையால் சபையால் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் வீதிகளின் அகலம் 6 மீற்றராக இருந்தன. காணித் துண்டுகளுக்கு முத்தர மின்சாரம் வழங்கப்பட்டிருந்தது. நீர் வசதிகளுக்காக வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் காணியின் கடைசிப் பகுதியில் 03 ரூட் 10 பேர்ச் அளவிலான 73 ஆம் இலக்க துண்டு சபையின் பொது வசதிகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும் அக்காணியில் அகற்றப்பட்ட தென்னை மரங்கள் மற்றும் ஏனைய மரங்களின் வேர் பகுதிகளையும் கழிவுப்பொருட்களை இடுவதற்காகவும் பயன்படுத்தப்பட்டிருந்தன. மேலும் காணியை பகுதிகளாக்கும் போது நிர்மாணிக்கப்பட்ட வீதியின் இரண்டு பகுதிகளிலும் உள்ள வடிகாணின் முறைமையின் நீர் குறித்த காணியினூடாக வெளியேறிச் செல்வது அவதானிக்கப்பட்டது.

## 4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 4.1.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சிகளின் கீழ் வடமேல் பொறியியலாளர் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் ஒப்பந்த முறைமையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பமுனகொட்டுவ வாரச்சந்தையின் மேல் முடிவில் காணப்பட்ட மீன் பலகைக்கு வியாபாரிகள் வியாபாரத்திற்கு செல்வதனை நிராகரித்திருந்ததுடன் 2015 ஒக்தோபர் 09 ஆந் திகதி பௌதீக பரிசோதனையின் போது குறித்த மீன் பலகை அமைந்துள்ள இடம் மற்றும் அதற்கு பொருத்தப்பட்ட நில ஒடுகள் என்பவற்றிற்கிடையே காடாகியிருந்ததுடன், மலசலகூடத் தொகுதியும் பயன்படுத்தப்படாத காரணத்தினால் காடாகியிருந்தது.

(ஆ) சபைக்குச் சொந்தமான 05 வாகனங்கள் 04 வருடங்கள் வரையான காலம் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலைமை பழுதடைந்து காணப்பட்டதுடன் அவற்றினை திருத்தம் மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு அல்லது வேறு பொருத்தமான நடவடிக்கை எடுத்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 தீர்வு செய்யப்படாத பொறுப்புக்கள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓய்வூதிய பங்களிப்பிற்காக ரூபா 3,056,174 ஓய்வூதியத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டியிருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்